# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---


2008, ஒற்றோபர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 37.00 தபாற் செலவு : ரூபா 10.00

# 2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஒ. 37/2006

**நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும் அது தொடர்பான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதற்கும் அத்தகைய கொள்கையின் செயற் படுத்துகையை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; நிலைபெறுதகு நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தியை உறுதிப் படுத்துவதற்கென, கிடைக்கக்கூடிய வீடமைப்பு அலகுகளைத் தரமுயர்த்துவதன்மூலம் அல்லது கூடுதல் சிறந்தனவாகவுள்ள வீடமைப்பு வசதிகளையும் ஆகக்குறைந்த நகரச் சேவைகளுக் கான அணுகுகையையும் வழங்குவதன்மூலம் குறைவாகச் சேவையாற்றப்பட்ட நகரக் குடியமர்த்தல்களில் வாழ்கின்ற ஆட்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சீராக்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1**. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

## பாகம் I

## நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபித்தலும் அமைத்தலும்

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்.

**2**. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபை எனவழைக்கப்படவேண்டிய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

2 -PL 003094-1,250 (2008/07)

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயரினால் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) அதிகாரசபையின் தலைமை அலுவலகம் கொழும்பு மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையை அமைத்தல்.

3. அதிகாரசபையின் அலுவல்களினது முகாமையும் நிருவாகமும், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர்கள் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது :-

(i) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ii) உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iii) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(iv) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஆ) போதிய பால்ரீதியிலான பிரதிநிதித்துவம் இருக்கின்றமையை உறுதிப்படுத்தி, அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றவர்களான பின்வரும் உறுப்பினர்கள் :-

(i) நகர இடப்பரப்புகளினது உள்ளூரதிகார சபைகளின் அக்கறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு மூன்று உறுப்பினர்கள் ;

(ii) நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தியில் அறிவும் அனுபவமும் கொண்டிருப்பவர்களாக அமைச்சருக்குத் தோன்றும் ஆட்களிடையேயிருந்து நான்கு உறுப்பினர்கள்.

உறுப்பினராக இருப்பதற்கெதிரான தகைமையீனம்.

4. ஆளொருவர் -

(அ) அவர், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால் ;

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இராவிட்டால் அல்லது இல்லாதொழிந்தால் ;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஈ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத்தீர்ப்புக்கு உட்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது உட்பட்டவராக இருந்திருந்தால் ;

(உ) அவர், அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபையின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழான ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருந்தால் அல்லது துய்த்தால் ; அல்லது

(ஊ) அவர், அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அவருக்குள்ள பணிகள் அவரினால் நிறைவேற்றப் படுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்,

சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராக்கப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களை அகற்றுதலும் அவர்கள் பதவி விலகுதலும்.

5. (1) சபையின் நியமன உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது எத்தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக, சபையின் நியமன உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) அதிகாரசபையின் நியமன உறுப்பினாரொருவர் இறந்தால், பதவி விலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், அமைச்சர், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரின் இடத்தில் வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

6. ஐந்தாம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் நியமன உறுப்பினரொருவரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும். *உறுப்பினர்களின் பதவிக் காலம்.*

7. சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஊதியம் அல்லது படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். *உறுப்பினர் களுக்கான ஊதியம் அல்லது படி.*

8. (1) அமைச்சரானவர், சபையின் நியமன உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளரொருவரை நியமிக்கலாம். *சபையின் தவிசாளர்.*

(2) தவிசாளரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டுமென்பதுடன், அவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அமைச்சரானவர் சபையின் நியமன உறுப்பினர் ஒருவரை நியமன உறுப்பினர் ஒருவராக அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாக அவரது இடத்திற் செயலாற்றவென நியமிக்கலாம்.

(4) தவிசாளர் அமைச்சரின் அங்கீகாரமின்றி, தமது பதவிக்குரிய கடமைகளுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் சம்பளத்துடனான தொழிலில் ஈடுபடுதலாகாது.

(5) தவிசாளர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தவிசாளர் என்ற பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது எத்தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(6) அமைச்சரானவர், குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளரை, தவிசாளர் என்ற பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) ஐந்தாம், (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், சபையில் அவரின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

9. (1) தவிசாளர் சமுகமாயிருப்பின், சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின் சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்ற தவிசாளர் அல்லது வேறு உறுப்பினர், தனது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, அதிகார சபையானது, அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பானதும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பானதுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

மதியுரைக் குழுவொன்றைத் தாபித்தல்.

10. (1) மதியுரைக்குழு எனவழைக்கப்படவேண்டிய குழுவொன்று அதிகாரசபையினால் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் உத்தேசங்களையும், திட்டங்களையும், கருத்திட்டங்களையும், நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் நிறைவேற்றுதலும் பற்றிய அத்தகைய ஏதேனும் கருமத்தை அங்கீகரிப்பதிலும் கையாளுவதிலும் அதிகார சபையானது மதியுரைக்குழுவின் மதியுரையை நாடலாம்.

(3) மதியுரைக் குழுவானது, போதிய பால்ரீதியிலான பிரதிநிதித்துவம் இருக்கின்றமையை உறுதிப்படுத்தி, ஒரு தவிசாளரையும் பதினான்குக்கு மேற்படாத உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபையானது, அதற்கு ஏற்புடையதற்பாலனவான விதிகளை எடுத்துரைத்தலும் அதன் பணிகளைத் தீர்மானித்தலும் வேண்டும்.

வெற்றிடமொன்று இருப்பதனி காரணமாகச் செயல்கள் செல்லுபடி யற்றனவாக்கப் படமாட்டாது.

**11.** அதிகாரசபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது அதன் எவரேனும் உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

அதிகாரசபையின் இலச்சினை.

**12.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்பட்டு வடிவமைக்கப்படலாம் என்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது, காலத்துக்குக் காலம் சபையினால் முடிவுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினையானது, சபையின் அனுமதியுடனன்றியும் தவிசாளரினதும் ஓர் உறுப்பினரினதும் சமுகத்திலன்றியும் தவிர, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் இடப்படுதலாகாது ; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும் :

ஆயின், அதிகாரசபையின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் இடப்படும் நேரத்தில் தவிசாளர் சமுகமளிப்பதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, அதற்கெனத் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டுக்கிணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் இடப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை அதிகாரசபையானது பேணுதல் வேண்டும்.

அமைச்சரின் பணிப்பின்கீழ் சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல்.

**13.** சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் அதன் பணிகளை நிறைவேற்றுவதிலும், அமைச்சரினால் காலத்துக்குக்காலம் அதற்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :

ஆயின், அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கு இணங்கியொழுகுதலானது, அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்திருத்தல் வேண்டும்.

சபையின் பணிகளையும், தத்துவங்களையும் கையளித்தல்.

**14.** (1) சபையானது, சபையின் தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(2) சபையின் தத்துவங்களுள் மற்றும் பணிகளுள் எவையும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்படுகின்ற தவிசாளர், அதிகாரசபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

அதிகாரசபையின் தத்துவங்களும் பணிகளும்.

**15.** அதிகாரசபையின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) நகரக் குடியமர்த்தல்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சீராக்குவதற்காக நகரக் குடியமர்த்தல்களிலுள்ள சமுதாயங்களிடமிருந்து பெறப்படக்கூடிய அத்தகையவற்றுக்கு உரிய கவனஞ்செலுத்தி, உத்தேசங்களையும், திட்டங்களையும், கருத்திட்டங்களையும் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் நிறைவேற்றுதலும் ;

(ஆ) சம்பந்தப்பட்ட சமுதாயங்களை இயன்றவிடத்தெல்லாம் மட்டத்துக்கு ஈடுபடுத்தி, நகரக் குடியமர்த்தல்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சீராக்கும் அபிவிருத்தி வேலையின் தொடர்புபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் ;

(இ) வீடமைப்புக் கடன்திட்டங்களைச் செயற்படுத்துதல் ;

(ஈ) அரசாங்கத்தின் நிதிசார் நடவடிக்கைமுறைக்கமைய, சேரி மற்றும் குடில்வாசிகளாகவுள்ள சமுதாயங்களைச் சேர்ந்த தனியாட்களுக்கு, தமது வீடமைப்பு நிலைமைகளைச் சீராக்குவதற்கான நிதிசார் மானியக் கொடைகளை வழங்குதல் ;

(உ) நகரக் குடியமர்த்தல்களின் வீடமைப்பு உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைத் தேவைகள் என்பவற்றை அடையாளங்காண்பதற்கு உள்ளூரதிகாரசபைகள் மற்றும் உள்ளூர் சமுதாயங்கள் அத்துடன் நிறுவனங்கள் என்பவற்றுடன் பங்குடைமையில் ஆய்வுகளையும் கற்கைகளையும் நிறைவேற்றுதலும், அத்தகைய தகவல் பற்றிய தரவுத்தளமொன்றைக் கிரமமான நாளதுவரையாக்கல்களுடன் அபிவிருத்தி செய்தலும் பேணுதலும் ;

(ஊ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நகர வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் செயற்படுத்துகையைப் பொறுப்பேற்றல் ;

(எ) சேரி மற்றும் குடில் வீடுகள் உள்ள சமூகத்தினர்களைத் தரமுயர்த்த முயற்சித்தலும் அத்தகைய குடியமர்த்தல் இடப்பரப்புகளின் அபிவிருத்தியைப் பொறுப்பேற்றலும் ;

(ஏ) வதிகின்ற சனத்தொகைக்கு நன்மைபயப்பதற்கு உட்கருதப்பட்ட வீடமைப்பு மற்றும் குடியமர்த்தற் கருத்திட்டங்களைத் திட்டமிடுவதிலும் செயற்படுத்துவதிலும் உள்ளூரதிகாரசபைகளினதும் உள்ளூர் சமுதாயங்களினதும் பங்குபற்றுகையை மேம்படுத்துதலும் பெறுதலும் ;

(ஐ) ஏலவேயுள்ள தேசியக் கொள்கையின் கட்டுக்கோப்பினுள் மக்களைத் தெரிவுசெய்து, குடியமர்த்தல் அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்ட நகரக் காணியின் மீது குடியமர்த்துவதற்கு அவசியமான எல்லாச் செயல்களையும் நிறைவேற்றுதல் ;

(ஒ) நகரக் குடியமர்த்தல் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக எவரேனுமாளுடன் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுதல் ;

(ஓ) கட்டட, பொறியியல் மற்றும் வேறு தொழிற்பாடுகள் என்பவற்றை நிறைவேற்றுதலும், வீடமைப்பு மற்றும் உள்ளகக்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் சம்பந்தப் பட்ட ஏதேனும் வேலையைப் பொறுப்பேற்றலும் நகரச் சேவைகளை வழங்குதலும் ;

(ஔ) ஏதேனும் நகரக் குடியமர்த்தல் இடப்பரப்பினுள் சமுதாயத்தின் பொதுவான சேமநலத்தையும் சமூக, கலாச்சார முன்னேற்றத்தையும் முன்னெடுத்துச் செல்லுதலும் அத்தகைய இடப்பரப்பின் அலுவல்களை நிருவகித்தலும் ;

(க) ஏதேனும் நகரக் குடியமர்த்தல் இடப்பரப்பில் வாழ்க்கை நிலைமைகளைச் சீராக்குவதில் தனியார் மூலதனத் தின் பங்குபற்றுகையை மேம்படுத்துதலும் பெறுதலும்;

(ங) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத் தைக்கொள்ளுதலும், வைத்திருத்தலும், அதனாற் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைமானம்வைத்த லும், விற்பனைசெய்தலும் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தலும், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளுக்கமைய, சேரி மற்றும் குடில்வாசிகளாக வுள்ள சமுதாயங்களைச் சேர்ந்த தனியாட்களுக்கு, அவர்களின் வீடமைப்பு நிலைமைகளைச் சீராக்கு வதற்கென, ஏதேனும் அசைவற்ற ஆதனத்திலான இறையிலிக் காணி உரிமைகளை அளித்தலும் ;

(ச) அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் அல்லது பங்குபற்றுகையுடன், நகரக் குடியமர்த்தல் அபி விருத்திக் கருத்திட்டங்களைப் பொறுப்பேற்கும்படி ஏதேனும் அரசாங்க முகவர்நிலையத்தை அல்லது தனியார் நிறுவனத்தைக் கோருதல் ;

(ஞ) அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதற் குச் சொந்தமான காணிகளையும், தொடர்மாடி களையும், வீடுகளையும், ஏனைய வாழ்வசதிகளையும், கட்டடங்களையும் அல்லது வேறு ஆதனங்களையும் முகாமைசெய்தல் ;

(ட) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டடத்துக்காக, தொடர்மாடிக்காக, வீட்டுக்காக அல்லது வேறு வாழ்வசதிக்காக அல்லது எவையேனும் சேவைகளுக்காக அல்லது வசதிகளுக்காக வாடகைகளை அல்லது கட்டணங்களை இறுத்தலும் ;

(ண) தொடர்மாடிகளை, வீடுகளை அல்லது வேறு வாழ்வசதிகளைக் கொள்வனவு செய்வதற்கு நகரவாசிகளுக்கான மேற்பார்வைசெய்யப்பட்ட கடன்வழங்கு செயற்றிட்டமொன்றை முகாமை செய்தலும் அதைப் பெற இயலச்செய்தலும் ;

(த) காசாக அல்லது வேறுவகையாக இலங்கையினுள்ளிருந்து அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்து கொடைகளை, மானியக்கொடைகளை, நன்கொடைகளை அல்லது மானியங்களை ஏற்றுக்கொள்ளுதலும், அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பிரயோகித்தலும் ;

(ந) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அதிகாரசபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீது, தொகுதிக்கடன்பத்திரங்களை அல்லது தொகுதிக் கடன்பத்திரப் பங்குத்தொகுதிகளை, முறிகளை, ஈடுகளை வழங்குவதன்மூலம் அல்லது வேறெவையேனும் பிணையங்களுடன் ஒன்றில் இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள மூலங்களிலிருந்து பணத்தைக் கடனாகப்பெறுதல் அல்லது திரட்டுதல் அல்லது கடப்பாடுகளைப் பெறுதல் ; அத்துடன்

(ப) ஏனைய அரசாங்க மற்றும் அரசாங்கஞ்சாரா நிறுவனங்களுடன் பங்குடைமைகளைச் செய்துகொள்ளுதலும், அதிகாரசபையின் பணிகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்குத் துணைநிலைத் தாபனங்களைத் தாபித்தலும்.

## பாகம் II

### நிதி

அதிகாரசபையின் நிதியம்.

16. (1) அதிகாரசபையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். பின்வருவன அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) அதிகாரசபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனாற் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) இலங்கையிலேனுஞ்சரி இலங்கைக்கு வெளியேயேனுஞ்சரி உள்ள எத்தகையனவுமான எவையேனும் மூலங்களிலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக அதிகாரசபையினாற் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) அதிகாரசபைக்குரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் நிருவகிக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்திலிருந்து அதிகாரசபையினால் பெறப்பட்ட எல்லா அரசிறையும் ;

(உ) குறைந்த செலவிலான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக்கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினாற் சேகரிக்கப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஊ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அதிகாரசபையினால் பெறப்பட்ட எல்லா அரசிறையும்.

(2) அதிகாரசபையானது அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகித்தலிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் தொடக்க மூலதனம் ஐயாயிரம் மில்லியன் ரூபாவாதல் வேண்டும். தொடக்க மூலதனத் தொகையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தவணைப்பணங்களில் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகைகள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

17. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் நிதிக்கட்டுப்பாட்டுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

கடன் பெறுவதற்கான தத்துவங்கள்.

18. (1) சபையானது, அமைச்சரின் சம்மதத்துடன் அல்லது அவரினால் அளிக்கப்பட்ட ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்காக அல்லது அதன் கடமைகளை

நிறைவேற்றுவதற்காகச் சபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்ற வகையாக அல்லது வேறுவகையாகத் தற்காலிகமாகக் கடனாகப் பெறலாம்:

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் சபையினால் திரட்டப்பட்ட எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் நிலுவையாக வுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், நிதி என்னும் விடயத் துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

(2) சபையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட அமைச்சரின் சம்மதத்துடன், தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்குவதன்மூலம் (1) ஆம் உட்பிரிவின்கீழான தற்காலிகக் கடன் என்ற வகையாக வல்லாது வேறுவகையில், அதிகாரசபையின் தொழிற்பாட்டு மூலதனத்தின் ஏற்பாட்டுக்காகப் பணத்தைக் கடனாகப் பெறலாம். அவ்வாறு உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட தொகுதிக் கடன் பத்திரங்கள், "நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபைத் தொகுதிக் கடன் பத்திரங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபைத் தொகுதிக் கடன்பத்திரங்கள், நிதி என்னும் விடயத்துக்குப்பொறுப்பாக வுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கிணங்க வழங்கப்படுதலும், கைமாற்றப் படுதலும், அவை தொடர்பில் நடவடிக்கையெடுக்கப்படுதலும், மீட்கப்படுதலும், இல்லாதாக்கப்படுதலும் வேண்டும்.

(4) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்பத்திரங் களின்மீது அல்லது திரட்டப்பட்ட கடன்களின்மீது வருமதியான ஏதேனும் பணத்தொகையின் முதலாகவுள்ள தொகையினது மீள்கொடுப்பனவுக்கும் அதன்மீதான வட்டிக் கொடுப்பனவுக்கும் உத்தரவாதமளித்தல் வேண்டும்.

## பாகம் III

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்.

**19.** (1) அமைச்சரினால் நியமிக்கப்படும் அதிகாரசபையின் பணிப்பாளர் - தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும் ; அவர் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும். பணிப்பாளர் - தலைமையதிபதி, வாக்களிப்பதற்கான உரிமையின்றி, சபையின் செயலாளராகவிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் - தலைமையதிபதியானவர், தவிசாளரின் பொதுவான மற்றும் விசேடமான பணிப்புக்கும் கட்டுப் பாட்டுக்கும் அமைய, அதிகாரசபையின் அலுவல்களைப் பணித்தல், அதிகாரசபையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் அத்துடன் அதிகாரசபை ஊழியர்களின் நிருவாகக் கட்டுப்பாடு என்பன பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் - தலைமையதிபதியானவர், சபையின் அங்கீகாரத்துடன், அவசியமெனக் காலத்துக்குக்காலம் கருதப்படக்கூடியவாறாக அவரது தத்துவங்களுள், பணிகளுள் மற்றும் கடமைகளுள் எவற்றையும் அதிகாரசபையின் வேறெவரேனும் ஊழியருக்கு எழுத்தில் கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய எவையேனும் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் எந்த ஊழியருக்கு அவ்வாறு கையளிக்கப்படுகின்றனவோ அந்த எவரேனும் ஊழியர், பணிப்பாளர் - தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கமைய அவற்றைப் பிரயோகித்தலும் வேண்டும்.

அலுவலர்களையும், சேவையாளர்களையும் முகவர்களையும் நியமித்தல்.

**20.** (1) அதிகாரசபையானது, அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வினைத்திறனுடன் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும், முகவர்களையும் நியமிக்கலாம் என்பதுடன், அதிகாரசபையின் பணியாட்டொகுதியின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம்.

(2) அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும், முகவர்களுக்கும் அதிகாரசபையினால் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந்தோராதலும் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களையும், உள்ளூராட்சிச் சேவை அலுவலர்களையும் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

**21.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஒரு பகிரங்கக்கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினதும் சம்மதத்துடன், அக்கூட்டுத்தாபனத்தின்

பணிப்பாளர் சபையினாலும் சபையுறுப்பினர்களினாலும் உடன் பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத் துக்குச் சேவைபுரிவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளைச் சபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் வேறெவரேனும் ஊழியர், விடயத்துக் கேற்ப, அத்தகைய உறுப்பினரினதும் ஊழியரினதும் உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழுவினதும் அல்லது உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதிகாரசபையினாலும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது முறையான உள்ளூரதிகார சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) உள்ளூராட்சிச்சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் ஊழியர், (6) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினர் அமைந்த வராகவுள்ள அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

(8) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியர், அத்தகைய ஊழியரினதும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுகின்ற சபையினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதிகார சபையினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுகின்ற சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான, ஒய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின்கீழ் அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தர மாக நியமிக்கப்படலாம்.

## பாகம் IV

## அசைவற்ற, அசைவுள்ள ஆதனங்களைக் கொள்ளுதலும் அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளை விற்பனை செய்தலும்

உள்ளூரதிகார சபைக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஆதனங்களைக் கொள்ளுதல்.

**22.** (1) ஓர் உள்ளூரதிகாரசபைக்கு அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் காணி அல்லது காணியிலுள்ள அக்கறை, அதிகாரசபையின் ஏதேனும் நோக் கத்துக்காக அதிகாரசபையினால் தேவைப்படுகின்றதென அமைச்சர் சான்றுப்படுத்துமிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அதன்கண் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள் எவையேனு மிருப்பின் அவற்றுக்கமைய, அக்கட்டளையிற் குறித்துரைக்கப் படவேண்டிய அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய காணியை அல்லது அத்தகைய காணியிலுள்ள அக்கறையை அதிகார சபைக்கு உரித்தாக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் மூலம் ஆக்கப்பட்டவொரு கட்டளை யானது, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, அக் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் காணிக்கு அல்லது காணியிலுள்ள அக்கறைக்கு மற்றும் அத்தகைய காணி யின்மீதுள்ள எவையேனும் கட்டடங்களுக்கும் ஏனைய கட்ட

மைப்புகளுக்கும் ஆன முழுமையான உரித்தை, அத்துடன் எந்தவித பாரபந்தமுமின்றி, அதிகாரசபைக்கு உரித்தாக்கல் வேண்டுமென்பதுடன், அத்தகைய காணி அல்லது அத்தகைய காணியிலுள்ள அக்கறை அல்லது அதன்கண்ணுள்ள கட்டடங்கள் அல்லது வேறு கட்டமைப்புகள் தொடர்பில் நட்டஈடெதுவும் அதிகாரசபையினால் செலுத்தப்படற்பாலதாதலுமாகாது.

(3) ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் சம்பந்தமான கட்டளையெதுவும், அத்தகைய உள்ளூரதிகார சபையின் சம்மதத்துடன் கொடுக்கப்பட்ட, உள்ளூராட்சி என்னும் விடயத்துக்கு அல்லது அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் சம்மதமின்றி (2) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

அரச காணியைத் தேவைக்கெடுத்தல்.

23. (1) அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் அதிகார சபையினது அலுவல்களின் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பு அல்லது குத்தகை எந்நோக்கத்துக்காகச் செய்யப்படுதல் வேண்டுமோ அந்நோக்கம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அதிகாரசபைக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பு அல்லது குத்தகை ஒன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் அதிகாரசபையின் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்குக் கைமாற்றுதலும் உரித்தாக்குதலும் வேண்டும்.

(3) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் சம்பந்தமான கட்டளையெதுவும், அத்திணைக்களத்துக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் சம்மதமின்றி (2) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்புடைமை.

**24.** சனாதிபதியானவர், நகர அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையொன்றின்மீது ஏதேனும் நகர இடப்பரப்பிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் காணி, மக்களின் பொதுச் சேமநலத்தினது நீதியான தேவைப்பாடுகளைச் சமாளிக்கக்கூடிய நகரக் குடியமர்த்தல் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவசரமாகத் தேவைப்படுகின்றதென அபிப்பிராயப்படுமிடத்து, சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம், நகர இடப்பரப்பிலுள்ள அத்தகைய காணி அத்தகைய நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதென வெளிப்படுத்தலாம். 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், இப்பிரிவின் நியதிகளின்படி காணி கொள்ளுதலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

காணிகொள்ளுதல் சட்டத்தின் ஏற்புடைமை.

**25.** நகர இடப்பரப்பொன்றிலுள்ள ஏதேனும் காணி அல்லது காணியிலுள்ள ஏதேனும் அக்கறை அதிகாரசபையினால் அதன் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் தேவைப்படுமிடத்து, அக்காணி அல்லது அதன்கண்ணுள்ள அக்கறை, அரசாங்கத்தினால் அல்லது அதிகாரசபையினால் (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படலாமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அக்காணியை அல்லது அதன்கண்ணுள்ள அக்கறையைக் கொள்ளும் நோக்கங்களுக்காக ஏற்புடையனவாதலும் வேண்டும். அத்தகைய காணி அல்லது அதன்கண்ணுள்ள அக்கறை, காணிகொள்ளுதற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒரு பகிரங்க நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஆதனத்தைப் பராதீனப் படுத்துதல்.

**26.** (1) அதிகாரசபையானது, அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு, அதிகாரசபையினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் காணி அல்லது காணியிலுள்ள அக்கறை அல்லது கட்டடம் எப்பயன்பாட்டுக்காக அல்லது பயன்பாடுகளுக்காகப் பராதீனப்படுத்தப்படுகின்றதோ அப்பயன்பாடு அல்லது பயன்பாடுகள் உட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, அக்காணியை அல்லது காணியிலுள்ள அக்கறையை அல்லது கட்டடத்தை விற்பனை, குத்தகை, வாடகை அல்லது கொள்வனவு என்ற வகையாகப் பராதீனப்படுத்தலாம் :

ஆயின், எவ்வாறாயினும், விடயத்துக்கேற்ப 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காணி அளிப்புகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அல்லது (464 ஆம் அத்தியாயமான) காணி

அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான அளிப்பின் மூலம் அல்லது அனுமதிப்பத்திரத்தின் மூலம் ஏதேனும் பராதீனம் நிறைவேற்றப்படுமிடத்து, அத்தகைய அளிப்பு அல்லது அனுமதிப்பத்திரம், அத்தகைய சட்டத்தின் அல்லது கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி சனாதிபதியினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, பராதீனப்படுத்தற் சாதனத்தினாற் பயனுறுத்தப்பட்ட பராதீனம் பின்வரும் பட்சத்தில் இல்லாதாக்கப்படலாம் அல்லது முடிவுறுத்தப்படலாம் என்ற பொருள்பட, பராதீனப்படுத்தற் சாதனத்தில் விசேட நிபந்தனைகள் இருத்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய சாதனத்திற் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் நிபந்தனையுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுதல் ;

(ஆ) அத்தகைய சாதனத்தின்கீழ் அதிகாரசபைக்கு வருமதியான ஏதேனும் பணம், அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் காலப் பகுதிக்குச் செலுத்தப்படாதிருத்தல் ;

(இ) காணியானது அல்லது காணிலுள்ள அக்கறை அல்லது கட்டடம், அதிகாரசபையினாலான நேரடி விற்பனையின் விடயத்திற்றவிர, பணிப்பாளர் - தலைமையதிபதியின் எழுத்திலான அனுமதியின்றி விற்பனை செய்யப்படுதல், கொடையளிக்கப்படுதல், குத்தகைக்குவிடப்படுதல் அல்லது வேறுவகையாகப் பராதீனப்படுத்தப்படுதல்.

(3) (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்திலுள்ளதெதுவும், ஏதேனும் நகர வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக அல்லது ஏதேனும் தொடர்புபட்ட நோக்கத்துக்காக அதிகாரசபையினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அரச காணியின் பராதீனப்படுத்துதலைப் பாதித்தலோ அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

**27.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பராதீனப்படுத்துதற் சாதனமொன்றை இல்லாதாக்குதல் அல்லது முடிவுறுத்தல் தொடர்பில், அதிகாரசபைக்கெதிராக அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் என்போருக்கெதிராக வழக்கு நடவடிக்கையெதுவும் அமைவதாதலாகாது.

அதிகாரசபைக்கெதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் அமைவதாதலாகாது.

## பாகம் V

### கடன்களுக்கு ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகள்

கடன்கள்.

**28.** ஒரு தொடர்மாடியை, வீடமைப்பு அலகை அல்லது வேறேதேனும் வாழ்வசதியைக் கொள்வனவுசெய்வதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு கடனும் –

(அ) அதிகாரசபையினாற் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் தவணைப் பணத்தின்மூலம் ; அல்லது

(ஆ) அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படுகின்ற வாறான வேறேதேனும் முறையிலும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

அறிவித்தலைச் சேர்ப்பித்தல்.

**29.** (1) (அ) அதிகாரசபையினால் கடனொன்று வழங்கப் படுகின்றவரான ;

(ஆ) ஓர் இறுதிவிருப்பாவணக் கையுதிர்ப்பென்ற வகையாக, அதிகாரசபையினால் கட னொன்று வழங்கப்பட்டுள்ளவரான ஆளொருவரின் மரணச்சொத்துக்கு மரண சாதன அதிகாரப்பத்திரத்தைப் பெறுகின்ற வரான ;

(இ) மரணமடைந்த கடன்பெறுநரொருவரின் மரணச் சொத்தைப் பிரதிநிதித்துவப்படுத்து வதற்கு 36 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படு கின்றவரான ; அல்லது

(ஈ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கடனொன்றுக்கான பிணைப்பொறுப்பாக அல்லது அத்தகையவொரு கடனுக்கான வேறேதேனும் விவரணத்தினதான பிணைப் பொறுப்பில், தன்னிச்சையான உரித்து மாற்றம் மூலமாகவோ அல்லது சட்டநடை முறையின் மூலமாகவோ அவ்வதிகார சபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்திலான ஏதேனும் உரிமை, உரித்து அல்லது அக்கறை சென்றடைகின்றவாரான,

ஆள் ஒவ்வொருவரும், அவருக்கான அறிவித்தல்கள் எம்முகவரிக்கு அனுப்பப்படலாமோ அம்முகவரி ஒன்றை அதிகாரசபைக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் எவரேனுமாளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டிய ஏதேனும் அறிவித்தல், அவரினால் அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அவ்வாளுக்கு முகவரியிடப்பட்டு அது பதிவஞ்சலில் அனுப்பப்படின், அவ்வாளுக்குத் தகுந்த முறையில் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருப்படுதல் வேண்டும். அறிவித்தலைச் சேர்ப்பித்தலானது, அஞ்சலின் சாதாரண நெறியின்போது அக்கடிதம் எந்நேரத்தில் ஒப்படைக்கப்படுமோ அந்நேரத்தில் பயனுறுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

30. (1) ஏதேனும் ஆனத்தின் பிணைப்பொறுப்பின் மீது அதிகாரசபையினால் கடனொன்று வழங்கப்படுமிடத்து, அக்கடனானது முழுமையாகக் கொடுத்துத்தீர்க்கப்படும்வரை, பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான அனுமதியுடனன்றியும் அவர் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கவன்றியும், அவ்வாதனம் விற்பனை செய்யப்படுதலோ, கொடையளிக்கப்படுதலோ, குத்தகைக்கு விடப்படுதலோ அல்லது வேறுவகையில் பராதீனப்படுத்தப் படுதலோ ஆகாது.

கடனைக் கொடுத்துத் தீர்த்தல்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் ஆதனத்தின் பராதீனம் அல்லது உடைமை அகற்றுகை, அது அவ்வுட்பிரிவுக்கு முரணாகவிருப்பின், செல்லுபடியற்றதாகவும், சட்டத்தில் எவ்வலுவோ எப்பயனோ இல்லாததாகவும் இருத்தல் வேண்டும்.

*அதிகார சபையினால் வழங்கப்பட்டவொரு கடனுக்கான ஈட்டின் முன்னுரிமை.*

31. ஏதேனும் ஆதனத்தின் ஈட்டின்மீது அதிகாரசபையினால் கடனொன்று வழங்கப்படுமிடத்து, அந்த ஆதனமானது, அத்தகைய ஈடு பதிவுசெய்யப்பட்ட தேதியன்றும் அதன்பின்னரும், அத்தகைய தேதிக்கு முன்னர் உரியமுறையில் பதிவுசெய்யப்பட்ட ஈடொன்றினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும், அதிகார சபையினால் கடன் வழங்கப்படுமுன்னர் பணத்தை நல்லெண்ணத்துடன் முற்பணமாகக்கொடுத்த கடன் கொடுநரொருவருக்கு வருமதியாகவுள்ளதுமான தனிசொன்று தவிர, அது சம்பந்தப்பட்ட வேறு ஒவ்வொரு தனிசுக்கும், ஈட்டுக்கும் அல்லது இறுப்பனவுக்கும் முன்னுரிமையாக வட்டியுடன் கடனைக் கொடுப்பனவு செய்வதற்குப் பொறுப்பிக்கப்பட்டதாதல் வேண்டும்.

*காணியின் ஈட்டுப் படிவம்.*

32. (1) ஏதேனும் கடனுக்கான பிணைப்பொறுப்பாக அதிகாரசபையின் சார்பில் எழுதி நிறைவேற்றப்பட்ட ஆதனத்தின் ஒவ்வோர் ஈடும், பொருளளவில் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டவொரு படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் ஈடானது, முழுமையாகவும் வருமதியான தேதியிலும் ஈட்டின்கீழ் வருமதியான வட்டி, முதல் என்ற கணக்கால் அல்லது வேறுவகையான ஏதேனும் கொடுப்பனவைச் செய்வதற்குக் கடன்பெறுநர் தவறினால் அல்லது அசட்டையாகவிருந்தால், எந்த வட்டி வீதத்தின் மீது கடன் வழங்கப்பட்டதோ அந்த வட்டிவீதத்திலும் பார்க்கக்கூடுதலான வட்டிவீதம் செலுத்தப்படுதல் வேண்டுமென்ற பொருத்தனையை உள்ளடக்கலாம்.

*கொடுப்பனவிலான தவறுகை.*

33. ஆதன ஈட்டின்மீது வழங்கப்பட்ட ஏதேனும் கடனின்மீது வருமதியான ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் தவறுகை புரியப்படுமிடத்து, அப்பணத்தொகை, முதல் அல்லது

வட்டி என்ற கணக்கால் அல்லது இரண்டினதும் கணக்கால் வருமதியானதாகவிருப்பினுஞ்சரி, அக்கடனின் செலுத்தப்படாதுள்ள முழுப் பாகம் தொடர்பிலும் அதன்மீது வருமதியான வட்டி தொடர்பிலும் தவறுகை புரியப்படுகின்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

34. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் கடனின் செலுத்தப்படாதுள்ள முழுப்பாகம் தொடர்பிலும், அதன் மீது வருமதியான வட்டி தொடர்பிலும் தவறுகை புரியப்படுமிடத்து அல்லது புரியப்படுவதாகக் கருதப்படுமிடத்து, அதிகார சபையானது, அதன் தற்றுணிபின் பேரில், எழுத்திலான கட்டளைமூலம், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட எவரேனுமாளுக்கு, எக்கடன் தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ அக்கடனுக்கான பிணைப்பொறுப்பாக அதிகாரசபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் மீது உட்பிரவேசிப்பதற்கும், அத்தகைய ஆதனத்தை உடைமை கொள்வதற்கும், ஈடுவைப்பவர் தவறுகை புரிந்திடாவிடின், அதனால் பிரயோகித்திருக்கக்கூடியவாறான அத்தகைய கட்டடத்தின் கட்டுப்பாட்டிலும் முகாமையிலுமான அதே தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதிகாரமளிக்கலாம். தவறுகைக்கான நடவடிக்கை.

35. முப்பத்தாறாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அதிகாரசபையானது, எழுத்திலான கட்டளைமூலம், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட எவரேனுமாளுக்கு, எந்தக் கடன் தொடர்பில் தவறுகைபுரியப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கடனுக்கான பிணைப்பொறுப்பாக அவ்வதிகாரசபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை, அத்தகைய கடனின் செலுத்தப்படாதுள்ள பாகத்தின் முழுமையையும், விற்பனைத் தேதிவரை அதன்மீது வருமதியான வட்டியையும், 42 ஆம் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலனவான பணங்களையும் செலவுதொகைகளையும் அறவிடுவதற்கெனப் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனைசெய்வதற்கு அதிகாரமளிக்கலாம். அதிகாரசபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை விற்பனை செய்தல்.

36. (1) இரண்டாம் உட்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிர, கடன்பெறுநர் இறந்துள்ளார் அல்லது கடனுக்கான பிணைப்பொறுப்பாகக் கடன்பெறுநரினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்திலான ஏதேனும் உரிமை, உரித்து அல்லது அக்கறை, தன்னிச்சையான உரித்துமாற்றத்தின்மூலம் கடன்பெறுநர் இறந்துள்ளவிடத்து

அல்லது அல்லது சட்டநடைமுறையின்மூலம் வேறெவரேனு மாளைச் சென்றடைந்துள்ளது என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், ஏதேனும் தவறுகையின் விடயத்தில் 34 ஆம், 35 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) கடன்பெறுநர் இறந்துள்ளவிடத்தும், அவரது இறுதி விருப்பாவணத்துக்கான மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது அவரது மரணச்சொத்துக்கான நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் வழங்கப்படாதுள்ளவிடத்தும் -

(அ) அக்கடனுக்கான பிணைப்பெறுப்பாகக் கடன்பெறு நரினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனம் எந்த மாவட்டத் தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றம், அதிகாரசபையினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும், நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறான அத்தகைய ஆட்கள் எவரேனுமிருப்பின் அவர்களுக்கு விண்ணப்பம் பற்றிய அறிவித்தலைச் சேர்ப்பித்த பின்னரும், மரணசாதன அதிகாரப்பத்திரத்தின் அளிப்பு அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரங்களின் வழங்குகை தாமதிக்கப்படக்கூடிய சாத்தியமுண் டெனத் திருப்திப்படின், இவ்வுட்பிரிவின் நோக் கத்துக்காகக் கடன்பெறுநரின் மரணச்சொத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஆளொருவரை நியமிக்கலாம் ; அத்துடன்

(ஆ) 34 ஆம், 35 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், இவ்வுட்பிரிவின் கீழ் கடன்பெறுநரின் மரணச் சொத்துக்கான பிரதிநிதியொருவர் நியமிக்கப் பட்டாலொழியவும் நியமிக்கப்படும்வரையும், அவரினாற் புரியப்பட்ட ஏதேனும் தவறுகையின் விடயத்தில் ஏற்புடையனவாதலாகாது.

விற்பனை செய்வதற்கான அறிவித்தலை வெளியிடுதல்.

37. (1) ஏதேனும் ஆதனத்தின் விற்பனைக்கு அதிகார மளிக்கின்ற, 35 ஆம் பிரிவின்கீழான ஒவ்வொரு கட்டளைபற்றிய அறிவித்தல், வர்த்தமானியிலும் நாளாந்தச் செய்தித் தாளொன்றிலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில்

வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிவித்தலின் பிரதிகள், கடன்பெறுநர் உயிரோடிருப்பின் அவருக்கும், அவ்வாதனம் தொடர்பில் 29 ஆம் பிரிவின்கீழ் தமது முகவரியை அறிவித்துள்ள ஒவ்வோராளுக்கும் சேர்ப்பிக்கப் படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்று எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அவ்வாளின்மொழி தமிழாக அல்லது ஆங்கிலமாக இருப்பின், அப்போது அத்தகைய அறிவித்தலின் பிரதியுடன்சேர்த்து மேலதிகமாக, அவ்வாளின் மொழியிலான அதன் மொழி பெயர்ப்பொன்று அவருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விற்பனை பற்றிய அறிவித்தல்.

38. ஒவ்வொரு விற்பனையினதும் தேதி, நேரம், இடம் என்பனபற்றிய அறிவித்தல், விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலின் பிரதிகள் -

(அ) கடன்பெறுநர் உயிரோடிருப்பின் அவருக்கும், விற்பனைக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளை 37 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டு மெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவருக்கும் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) விற்பனைசெய்யப்படவுள்ள ஆதனத்தின்மீது அல்லது அதற்கண்மையில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அவ்வாதனமானது எந்தப் பிரதேசசபையின் அல்லது கிராமசேவையாளர் பிரிவின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்தப் பிரதேச சபையின் சுவர் களிலும் கிராமசேவையாளர் பிரிவினுள்ளும் ஒட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

விற்பனைக்கு முன்னர் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்.

39. (1) கடனின் செலுத்தப்படாதுள்ள பாகத்தின் முழுமையான தொகையும், ஈட்டின் நியதிகளின்படி அதன்மீது வருமதியான எல்லா வட்டியும், 42 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபையினால்

அறவிடப்படற்பாலனவான பணத்தொகைகளும் செலவுத் தொகைகளும் எவையேனுமிருப்பின் அவையும் கடன்பெறுநரினால் அல்லது அதற்கெனக் கடன்பெறுநரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் கடனுக்கான பிணைப் பொறுப்பாக அதிகாரசபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை விற்பனைசெய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் அதிகாரசபைக்கு அளிக்கப்படின், அவ்வாதனமானது விற்பனை செய்யப்படுதலாகாதென்பதுடன், அவ்வாதனத்தை விற்பனை செய்வதற்காக 35 ஆம் பிரிவின்கீழான கட்டளையைப் பின்பற்றி மேற்கொண்ட நடபடிகள் எவையும் எடுக்கப்படுதலுமாகாது.

(2) எந்தத் தவணைப்பணத்தொகை அல்லது வேறு கொடுப்பனவுத் தொகை தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ அந்தத் தவணைப்பணத்தொகையும் அல்லது வேறு கொடுப்பனவுத்தொகையும், ஈட்டின் நியதிகளின்படி அதன்மீது வருமதியான ஏதேனும் வட்டியும், 42 ஆம் பிரிவின் கீழ் அதிகாரசபையினால் அறவிடப்படற்பாலனவான பணத் தொகைகளும் செலவுதொகைகளும் எவையேனுமிருப்பின் அவையும், கடன்பெறுநரினால் அல்லது அதற்கெனக் கடன்பெறுநரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் கடனுக்கான பிணைப்பொறுப்பாக அதிகாரசபைக்கு ஈடுவைக் கப்பட்ட ஆதனத்தின் விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அதிகாரசபைக்கு அளிக்கப்படின், அதிகாரசபை யானது, அதன் தற்றுணி பின்பேரில், அத்தகைய ஆதனம் விற்பனை செய்யப்படுதலாகாதென்றும், அவ்வாதனத்தை விற்பனை செய்வதற்காக 35 ஆம் பிரிவின்கீழான கட்டளையைப் பின்பற்றி மேற்கொண்ட நடபடிகள் எவையும் எடுக்கப்படுதலாகா தென்றும் பணிக்கலாம்.

குறைந்தபட்ச விலையை நிர்ணயித்தல்.

40. அதிகாரசபையானது, குறைந்தபட்ச விலையொன்றை நிர்ணயிக்கலாம் ; கடனுக்கான பிணைப்பொறுப்பாக அதிகாரசபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம் இவ்விலைக்குக் குறைவாக, அதிகாரசபை தவிர்ந்த எவரேனுமாளுக்கு, விற்பனைசெய்யப்படுதலாகாது.

அதிகார சபைக்காகப் பகிரங்க ஏலமொன்றிலான விலைக்கேள்வி.

41. அதிகாரசபையின் பணிப்பாளர் - தலைமையதிபதி அல்லது அவரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், ஏதேனும் கடனுக்கான பிணைப்பொறுப்பாக அதிகாரசபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் பகிரங்க ஏலத்தின் மூலமான விற்பனையொன்றில், அதிகாரசபைக்காகவும் அதன்சார்பிலும் அவ்வாதனத்துக்காக விலைக் கேள்வி கூறி அதனைக் கொள்வனவு செய்யலாம்.

அதிகார சபையினால் இறுக்கப்பட்ட மேலதிகச் செலவுத் தொகைகள்.

**42.** (1) ஏதேனும் கடனின்மீது வருமதியான தொகையுடன் சேர்த்து மேலதிகமாக, அதிகாரசபையானது கடன்பெறுநரிட மிருந்து அல்லது அவரின்சார்பில் செயலாற்றுகின்ற எவரேனு மாளிடமிருந்து -

(அ) அதிகாரசபைக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் செய்யப்பட்ட ஏதேனும் காப்புறுதிப் பத்திரத்தின்கீழான கட்டுப்பணங்களையும் ஏனைய இறுப்பனவுகளையும் கொடுப்பனவுசெய்வதிலும், எவ்வாளுக்குக் கடன்வழங்கப்பட்டதோ அவ்வாளி னால் எழுதி நிறைவேற்றப்பட்ட ஈட்டுமுறியில் அடங்கியுள்ள பொருத்தனைகளின்மூலம் அதிகார சபையினால் உறப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட மற்றெல்லாச் செலவுத்தொகைகளையும் இறுப்பனவு களையும் கொடுப்பனவு செய்வதிலும் மேற்கூறப்பட்ட பொருத்தனைகளுக்கிணங்க அதிகாரசபையினால் செலவிடப்பட்ட எல்லாப் பணங்களையும் ; அத்துடன்

(ஆ) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனையை விளம் பரப்படுத்துவதற்கும் அதனை விற்பனை செய்வதற் குமான செலவையும்,

அறவிடலாம் :

ஆயின், இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் செலவுத் தொகைகளாக அறவிடப்பட்ட தொகை, விதித்துரைக்கப்படக் கூடியவாறான கடனின் அத்தகைய நூற்றுவீதத்தை விஞ்சுத லாகாது.

(2) பணிப்பாளர்-தலைமையதிபதி அதிகாரசபையின் சார்பில் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தைக் கொள்வனவு செய்துள்ளவிடத்து, அவர், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட செலவுதொகைகளைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அவர், அத்தகைய பணங்களும் செலவுதொகைகளும் அவ்வுட்பிரிவின் கீழ் கடன்பெறுநரிடமிருந்து அறவிடப்பட்டபின்னர், அவ்வாறு அறவிடப்பட்ட தொகையை நிதியத்துக்கு வரவுவைத்தலும் வேண் டும்.

அதிகாரசபைக்கு வருமதியான தொகையைக் கழித்த பின்னர் வரும்படிகளின் மீதியைக் கொடுப்பனவு செய்தல்.

**43.** ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்பனை செய்யப்படுமிடத்து, அதிகாரசபையானது, ஈட்டின்மீது வருமதியான தொகையையும் 42 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான பணங்களையும் செலவு தொகைகளையும் விற்பனையின் வரும்படிகளிலிருந்து கழித்தபின்னர், எஞ்சியுள்ள மீதி ஏதேனுமிருப்பின் அதனை, ஒன்றில் கடன்பெறுநருக்கு அல்லது கடன்பெறுநருக்கு வருமதியான கொடுப்பனவை ஏற்றுக்கொள்வதற்குச் சட்டப்படியாக உரித்துள்ள எவரேனுமாளுக்கு அல்லது அப்பணமானது எவருக்குச் செலுத்தவேண்டுமென்பதுபற்றி அதிகாரசபைக்கு ஐயமிருப்பின், அத்தகைய ஆதனம் எம்மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அம்மாவட்ட நீதிமன்றத்துக்கு அப்பணம், அதற்குரித்துள்ள ஆளினால் பெறப்படுவதற்கெனச் செலுத்தப்படுதல் வேண்டும்.

விற்பனைச் சான்றிதழ்.

**44.** (1) ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்பனை செய்யப்படுமிடத்து, பணிப்பாளர் - தலைமையதிபதியானவர், அதிகாரசபையின் சார்பில் விற்பனைச் சான்றிதழொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அதன்மேல், ஆதனத்துக்கும் ஆதனத்திலும் கடன்பெறுநருக்குள்ள எல்லா உரிமைகளும், உரித்தும், அக்கறையும் கொள்வனையாளருக்கு உரித்தாதலும் வேண்டும் ; அத்துடன் அதன்பின்னர், அதிகாரசபைக்கு அவ்வாதனம் ஈடுவைக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட, எத்தகையதுமான ஏதேனும் கையுதிர்ப்பினூடாக அல்லது அதன்கீழ் ஆதனத்துக்கும் ஆதனத்திலுமான ஏதேனும் உரிமையை, உரித்தை அல்லது அக்கறையை உரிமைகோருகின்ற எவரேனுமாள், செல்லுபடியற்றதாக்குவதற்கென அல்லது கொள்வனையாளருக்கெதிராக ஆதனத்துக்கு அல்லது ஆதனத்தில் ஏதேனும் உரிமையை, உரித்தை அல்லது அக்கறையைப் பேணுவதற்கென ஏதேனும் நீதிமன்றத்தில் பிரேரிப்பது தகுதிவாய்ந்ததாகவிருத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் சார்பில் பணிப்பாளர் - தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட விற்பனைச் சான்றிதழ், ஏதேனும் ஆனத்தின் விற்பனை தொடர்பாக இப்பாகத்தின் எல்லா ஏற்பாடுகளும் இணங்கியொழுகப்பட்டுள்ளனவென்பதற்கு அவ்வாதனத்தின் விற்பனை தொடர்பில் முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(3) விற்பனைச் சான்றிதழானது, அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

ஆட்சியுரிமைக் காலப்பகுதி.

**45.** ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்பனை செய்யப்படுமிடத்து, விற்பனைத் தேதிக்குப்பின்னர் மூன்று மாதங்கள் முடிவுற்ற பின்னர் வழக்கு எதுவும் அல்லது வேறுவழக்கு நடவடிக்கைகள் எவையும் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடங்கப்படுதலாகாதென்பதுடன், எத்தகையதுமான எக்காரணத்துக்காகவேனும் விற்பனையைச் செல்லுபடியற்றதாக்கும் அல்லது கொள்வனையாளருக்கெதிராக ஆதனத்துக்கு அல்லது ஆதனத்திலான ஏதேனும் உரிமையை, உரித்தை அல்லது அக்கறையைப் பேணும் நோக்கத்துக்காக 46 ஆம் பிரிவின் கீழ் கொள்வனையாளரினால் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் எதிர்வாதமெதுவும் ஏற்படுத்தப்படாதுமிருக்கலாம்.

உடைமையை ஒப்படைப் பதற்கான கட்டளை

**46.** (1) இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்பனைசெய்யப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் கொள்வனையாளர், அவ்வாதனம் எம்மாவட்டம் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அம்மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீதும் 44 ஆம் பிரிவின் கீழ் அவ்வாதனம் தொடர்பில் வழங்கப்பட்ட விற்பனைச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைக் காண்பிப்பதன் மேலும், அவ்வாதனத்தின் வெற்றான உடைமை ஒப்படைக்கப் பெறுவதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு விண்ணப்பமும், மனு மற்றும் சத்தியக்கடதாசி என்ற வகையாகச் செய்யப்படுதல் வேண்டும் ; 44 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஆதனத்தின் விற்பனைச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி இதனோடு இணைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தின் நோக்கத்துக்காகவும், அதிகாரசபைக்காகவும் அதன் சார்பிலும் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவிர்ந்த எவரேனுமாளினால் அவ்வுட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் விளைவாக நடாத்தப்பட்ட எல்லா வழக்கு நடவடிக்கைகளின் மீதும், அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் முத்திரைத் தீர்வைகளும் ஏனைய இறுப்பனவுகளும் எந்த வீதங்களில் செலுத்தப்படற்பாலனவாகவுள்ளனவோ முறையேயான அந்த வீதங்களில் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பத்தை முன்வைப்பதன்மேல், மாவட்ட நீதிமன்றம், உடனடியாக, அவ்வாதனத்தின் உடைமையைக் கொள்வனையா ருக்கு ஒப்படைக்கும்படி கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு, உடைமைகொள் எழுத்தாணையொன்றில் குறித்துரைக்கப்பட்டவொரு தேதிக்கு முன்னர், கொள்வனையாளருக்கு அல்லது அந்நோக்கத்துக்காக அவரினால் நியமிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளுக்கு அவ்வாதனத்தின் உடைமையை ஒப்படைக்கும்படியும், குடியிருப்பாளரையும் அவரது தங்கிவாழுநர்கள் எவரேனு மிருப்பின் அவர்களையும் அத்தகைய ஆதனத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் குடியிருக்கும் வேறொவ்வோர் ஆளையும் அவ்வாதனத்திலிருந்து வெளியேற்றும்படியும் தேவைப்படுத்துகின்றதும் அதிகாரமளிக்கின்றதுமான அவ்வெழுத்தாணையை வழங்குதல் வேண்டும். பிசுக்காலுக்கு அல்லது பொலிசு அலுவலருக்கு அல்லது பிசுக்காலினால் அல்லது பொலிசு அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரே னுமாளுக்கு வழங்கப்பட்ட அவ்வெழுத்தாணையை நிறைவேற்று வதில் அவர், கட்டளையை வழங்கிய மாவட்ட நீதிமன்றத்தின் பணிப்புகளுக்கிணங்கக் கட்டடத்தினுட் பிரவேசிப்பதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்த லாம்.

அதிகாரசபையினால் மீள விற்பனை செய்யப்படுவதற்கு முன்னர், விற்பனையை இல்லாதாகுதல்.

47. ஆதனமானது அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்படுமிடத்து, அதிகாரசபையானது, அந்த ஆதனத்தை மீள் விற்பனைசெய்வதற்குமுன்னர் எந்நேரத்திலேனும், கைப்பற்றி விற்பனை செய்வதற்கான செலவுதொகைகளும், விதித்துரைக் கப்பட்ட வீதத்தை விஞ்சாதவொரு வீதத்தில் கூட்டுமொத்தப் பணத்தொகையின்மீதான வட்டியும் உட்பட, ஆதனமானது எக்கடனுக்காக விற்பனை செய்யப்பட்டதோ அக்கடன் தொடர்பில் வருமதியான தொகையைக் கடனாளி அல்லது அவரது சார்பில் எவரேனுமாள் செலுத்துவதன்மேல், விற்பனைச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றின்மீது அப்பொருள்பட்ட வொரு புறக்குறிப்பிடுவதன் மூலம் அவ்விற்பனையை அதிகார சபை இல்லாதாக்கலாம். அத்தகையவொரு புறக்குறிப்பு, காணிப் பதிவாளரின் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படுவதன்மேல், இப் ாகத்தின் கீழான விற்பனை செய்யப் ட்டிருக்கவில்லை என்றாற்போன்று அக்காணியைக் கடன் பெறுநருக்கு மீள உரித் தாக்கப்படுவதாக செயல்படுதல் வேண்டும்.

48. (1) விற்பனை செய்யப்பட்ட ஆதனம் அதிகாரசபையினால் கொள்வனவுசெய்யப்பட்டு, விற்பனையானது 47 ஆம் பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படாதவிடத்து, அதிகாரசபையானது எந்நேரத்திலும், அவ்வாதனத்தை மீளவிற்பனைசெய்து, உண்மையான பிரதியொன்றாகவுள்ளதென அதிகாரசபையினால் சான்றுப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய விற்பனைச் சான்றிதழின் பிரதியின் மீதான புறக்குறிப்பின்மூலம் அத்தகைய கொள்வனையாளருக்கு, அதிகாரசபையினால் கொள்ளப்பட்ட அவ்வாதனத்துக்கான அல்லது அவ்வாதனத்திலான எல்லா உரிமையையும், உரித்தையும் அக்கறையையும் கைமாற்றலாம்.

அதிகாரசபையினால் மீளவிற்பனை செய்யப்படுதல்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட புறக்குறிப்பொன்று, அது காணிப்பதிவாளரின் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படும்போது, அதன்கண் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய உரிமையையும், உரித்தையும், அக்கறையையும் அப்புறக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட கொள்வனையாளருக்கு உரித்தாக்குதல் வேண்டும்.

49. பிரிவுகள் 28 முதல் 48 வரையில் அடங்கியுள்ளதெதுவும், அப்போதைக்கு வலுவலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் ஈட்டுமுறியின் மீது வருமதியான தொகையை அறவிடுவதிலிருந்து அதிகாரசபையைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

ஏனைய அறவீட்டு முறைகளிலிருந்து அதிகாரசபை தடைசெய்யப்படாமை.

## பாகம் VI

### அதிகாரசபைக்குச் சொந்தமான தொடர்மாடிகள், வாழிட வசதி அல்லது வேறேதேனும் கட்டடம் என்பவற்றின் உடைமை பணிப்பாளர் - தலைமையதிபதியினால் மீளப்பெறப்படுதல்

50. (1) எவரேனுமாளினால் குடியிருக்கப்படுவதற்கு அதிகாரசபையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட (இதனகத்துப் பின்னர் “கட்டடம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒவ்வொரு வீட்டுக்கும், தொடர்மாடிக்கும், வாழிடவசதிக்கும் அல்லது வேறேதேனும் கட்டடத்துக்கும், அத்தகைய குடியிருத்தல் ஏதேனும் வாடகைக் கொடுப்பனவின் மீதானதாகவிருப்பினுஞ்சரி வேறு வகையாகவிருப்பினுஞ்சரி, இப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொருள் கோடல்.

(2) எவரேனுமாளினால் குடியிருக்கப்படுவதற்காக அதிகார சபையினால் கட்டடமொன்று ஏற்பாடுசெய்யப்படுமிடத்து, அப்போது, அக்கட்டடம் தொடர்பாக இப்பாகத்தில் "வீட்டுச் சொந்தக்காரர்" என்னும் சொல்லமைப்பு 19 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் - தலைமையதிபதி என்று பொருளாதல் வேண்டுமென்பதுடன், இப்பாகத்தில் "குடியிருப்பாளர்" என்னும் சொல்லமைப்பு, குடியிருக்கும் ஆளெனப் பொருளாதலும் வேண்டும்.

இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள கட்டடத்தை வறிதாக்குவதற்கான கடப்பாடு.

51. (1) இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் கட்டடத்தின் குடியிருப்பாளரும் அவரது தங்கிவாழுநர்களும், அத்தகைய கட்டடத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் குடியிருக்கும் வேறொவ்வோர் ஆளும், குடியிருப்பாளரினால் அத்தகைய கட்டடத்தில் குடியிருத்தல் சட்டமுறையாக முடிவுறுத்தப்படும் தேதிக்குப்பின்னர் அத்தகைய கட்டடத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் குடியிருப்பதற்கு உரித்துடையவராதலாகாது என்பதுடன், அதற்கிணங்கக் குடியிருப்பாளர், அத்தேதியன்று கட்டடத்தை விட்டு வெளியேறி அவரது வீட்டுச் சொந்தக்காரருக்கு அதன் உடைமையை ஒப்படைத்தலும், அவரது தங்கிவாழுநர்களுடனும் அத்தகைய காணியில் அல்லது வளவுகளில் அல்லது அதன் ஏதேனும் ாகத்தில் குடியிருக்கின்ற வேறொவ்வோராளுடனும் அத்தகைய கட்டடம் அமைந்துள்ள காணியை அல்லது வளவுகளை விட்டு நீங்குதலும் வேண்டும்.

(2) இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் கட்டடம், வீட்டுச்சொந்தக்காரின் ஊழியத்திலுள்ள எவரேனுமாளினால் குடியிருக்கப்படுவதற்காக அவ்வீட்டுச் சொந்தக்காரரினால் ஏற்பாடுசெய்யப்படுமிடத்து, அவ்வாள் அத்தகைய கட்டடத்தில் குடியிருத்தலானது, அவ்வாளின் ஊழியம் சட்டமுறையாக முடிவுறுத்தப்படும் தேதியன்று சட்டமுறையாக முடிவுறுத்தப்பட்டதாக இப்பாகத்தின் நோக்கத்துக்காகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில் குடியிருப்பாளரின் ஊழியம் அறிவித்தலின்றி முடிவுறுத்தப்படுமிடத்து, அவரது ஊழியத்தின் சட்டமுறையான முடிவுறுத்தற்றேதிக்கு அவ்வுட்பிரிவிலுள்ள குறிப்பீடு, உண்மையான முடிவுறுத்தற்றேதிக்குப்பின்னர் பதினான்கு நாட்களுக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

உடைமையை மீளப் பெறுவதற்காகவும் இடைக்காலக் கட்டளையைச் சேர்ப்பிப்பதற்காகவும் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்தல்.

52. (1) இப்பாகம் எக்கட்டடத்துக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அக்கட்டத்தின் குடியிருப்பாளர் 51 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஏதேனும் விடயத்தில், அக்கட்டடம் எந்த இடப்பரப்பில் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பின் மீது நியாயதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தில், கட்டடத்தின் உடைமையை மீளப்பெறுவதற்காகவும், குடியிருப்பாளரையும், அவரது தங்கிவாழுநர்களையும், அத்தகைய காணியில் அல்லது வளவுகளில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் குடியிருக்கின்ற வேறொவ்வோராளையும் கட்டடம் அமைந்துள்ள காணியிலிருந்து அத்துடன் வளவுகளிலிருந்து வெளியேற்றுவதற்காகவும் இறைஞ்சிக் கேட்கின்ற விண்ணப்பமொன்றைக் கோப்பிடுவது வீட்டுச் சொந்தக்காரருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும், குடியிருப்பாளர் குடியிருத்தலை முடிவுறுத்தும் நேரத்தையும் முறையையும் எடுத்துக்கூறுகின்ற சத்தியக்கடதாசியினால் ஆதாரப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப் மொன்றைப் பெற்றதன் மேல் நீதிமன்றமானது, விண்ணப்பத்தினதும் சத்தியக்கடதாசியினதும் பிரதியொன்றையும், அத்துடன் -

(அ) கட்டளையொன்று சேர்ப்பிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் இரு பஞ்சாங்க மாதங்களுக்குப் பிந்தாததாகவுள்ளதும் அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டதுமான ஒரு தேதியில் தோன்றும்படியும் ; அத்துடன்

(ஆ) 51 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கட்டடத்தின் உடைமையை அவர் ஏன் ஒப்படைக்க முடியாதென்றும், அவரது தங்கிவாழுநர்களுடனும் அத்தகைய காணியில் அல்லது வளவுகளில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் குடியிருக்கின்ற வேறொவ்வோராளுடனும் அது அமைந்துள்ள காணியை அல்லது வளவுகளை அவர் ஏன் விட்டு நீங்குதலாகாதென்றும் காரணங்காட்டும்படியும்,

தேவைப்படுத்துகின்ற இடைக்காலக் கட்டளையையும் குடியிருப்பாளருக்குச் சேர்ப்பிக்கச்செய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான இடைக்காலக் கட்டளை யொன்று, அது பிசுக்காலினால் அல்லது பிசுக்காலினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் அவரிடம் ஒப்படைக் கப்படின் அல்லது அதை அவ்வாறு ஒப்படைக்க முடியாத விடத்து, பிசுக்காலினால் அல்லது மேற்கூறப்பட்டவாறு அதிகார மளிக்கப்பட்ட ஆளினால், கட்டளையானது எக்கட்டடம் தொடர் பானதோ அக்கட்டடத்தின் துலாம்பரமான ஏதேனும் இடத்தில் ஒட்டப்படின், குடியிருப்பாளருக்குச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

கேட்பை ஒத்திவைத்தல்.

53. (1) இப்பாகத்தின்கீழ் இடைக்காலக் கட்டளையொன்று எந்தக் குடியிருப்பாளருக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் குடியிருப்பாளர், கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, சத்தியக்கடதாசி யின்மூலம் அல்லது சத்தியத்தின்மீதான அல்லது உறுயுதிரையின்மீதான கூற்றின் மூலம் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் கேட்பின் ஒத்திவைப்பை அவசியமாக்குகின்ற ஏதேனும் எதிர்வாதத்தை எழுப்பினால், நீதிமன்றமானது உடனடியாக, எழுப்பப்பட்ட வழக்கெழு வினாவை அல்லது வழக்கெழுவினாக்களைத் தீர்த்துவைத்து பதிதல் வேண்டு மென்பதுடன், விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, இயன்றளவு விரைவில் சான்றைக் கேட்பதற்கான தேதியொன்றை நியமித்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விடயத்தில் நீதிமன்றப் பதிவாளர், அதன்மேல், திறத்தவர்களினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்காரருக்கும் அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதரும்படி ஆணையிட்டு அவ்வழைப்புக்கட்டளையை வழங்குதல் வேண்டும்.

(2) ஏதேனும் வழக்கைக் கேட்பதற்காக (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் தேதி நியமிக்கப்படுமிடத்து, கேட்பானது -

(அ) வழக்குக்கான எல்லாத் திறத்தவர்களும் அத்தகைய ஒத்திவைப்புக்குச் சம்மதித்தாலொழிய, அல்லது

(ஆ) வழக்குக்கு முக்கியமாகவுள்ள நிகழ்வுகளை அறிந்துள்ளவரும் எண்பிக்க இயன்றவருமான சாட்சிக்காரரொருவரின் மறைமுகச் சூழ்ச்சியினாலல்லாது வேறுவகையான வருகைதராமை காரணமாக அத்தகைய ஒத்திவைப்பு அவசியமாகவுள்ளதெனச் சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது அல்லது சத்தியக்கடதாசி மூலம் கொடுத்துதவப்பட்ட சான்றின்மேல் நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய,

ஏதேனும் பிந்திய தேதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்படுதலாகாது.

(3) வழக்கைக் கேட்பதற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கேட்பு எந்தப் பிந்திய தேதிக்கு, ஏதேனுமிருப்பின், ஒத்திவைக்கப்படலாமோ அத்தகைய வேறு தேதியன்று நீதிமன்றமானது, எழுப்பப்பட்ட வழக்கெழுவினாக்களைக் கேட்டுத்தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அதன்மீது தீர்ப்பளித்தலும் வேண்டும்.

வெளியேற்றற் கட்டளை.

54. (1) இப்பாகத்தின்கீழ் இடைக்காலக் கட்டளையொன்று எந்தக் குடியிருப்பாளருக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் குடியிருப்பாளர், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது இப்பாகத்தின்கீழ் கேட்பானது அத்தகைய எந்த வேறு தேதிக்கு ஏதேனுமிருப்பின், ஒத்திவைக்கப்படலாமோ அந்த வேறு தேதியன்று தோன்றாதிருப்பின் அல்லது தோன்றியிருந்து, 51 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக, கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட கட்டடத்தின் உடைமையை அவர் ஏன் ஒப்படைக்கக்கூடாதென்றும், அவரது தங்கிவாழுநர்களுடனும் அல்லது அத்தகைய காணியில் அல்லது வளவுகளில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் குடியிருக்கின்ற வேறொவ்வோராளுடனும் அது அமைந்துள்ள காணியை அல்லது வளவுகளை அவர் ஏன் விட்டு நீங்குதலாகாதென்றும் செல்லுபடியான நற்காரணத்தைக் காட்டத் தவறுவாராயின், இடைக்காலக் கட்டளையானது முற்றானதாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றமானது, அத்தகைய

ஆளையும், அவரது தங்கிவாழுநர்களையும், அத்தகைய காணியில் அல்லது வளவுகளில் குடியிருக்கின்ற வேறொவ் வோராளையும் அத்தகைய காணியிலிருந்து அல்லது வளவு களிலிருந்து உடனடியாக வெளியேற்றும்படி பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிவானொருவரினால் ஆக்கப் பட்ட ஏதேனும் வெளியேற்றற் கட்டளைக்கெதிராக மேன்முறை யீடெதுவும் அமைவதாதலாகாது.

வெளியேற்றற் கட்டளைக்கு இணங்கி யொழுகாமை.

55. (1) எவரேனுமாள் 54 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, நீதி வானானவர், வீட்டுச்சொந்தக்காரரின் விண்ணப்பத்தின்மேல், கட்டளை தொடர்புபட்ட காணியிலிருந்து அல்லது வளவு களிலிருந்து கட்டளையினால் பிணிக்கப்பட்ட எல்லா ஆட்களை யும் வெளியேற்றும்படியும், காணிச் சொந்தக்காரருக்கு அத்தகைய காணியின் அல்லது வளவுகளின் உடைமையை ஒப்படைக்கும் படியும் பிசுக்காலுக்கு அல்லது பொலிசு அலுவலரொருவருக்கு உடைமைகொள் எழுத்தாணையொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) வெளியேற்றற் கட்டளையின் நிறைவேற்றுகை பொறுப் பிக்கப்பட்ட பிசுக்கால் அல்லது பொலிசு அலுவலர், அத்தகைய கட்டளை எந்த நீதிவான் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளையை அவர் நிறை வேற்றிய முறை பற்றி உரிய விபரத்திரட்டொன்றைத் தயாரித் தலும் வேண்டும்.

(3) வெளியேற்றற் கட்டளையொன்றை நிறைவேற்றுவதில், பிசுக்கால் அல்லது பொலிசு அலுவலர் அல்லது பிசுக்காலினால் அல்லது பொலிசு அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், அக்கட்டளை தொடர்புபட்ட காணியினுள் அல்லது வளவுகளினுள் பிரவேசிப்பதற்கும், அக்கட்டளையினால் பிணிக்கப்பட்ட எவரேனும் ஆளை வெளியேற்றுவதற்கும், அக்கட்டளையை வழங்கிய நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்புக் கிணங்க, காணியின் அல்லது வளவுகளின் உடைமையை ஒப்படைப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

குடியிருப்பதற்கான உரிமையை நிலைநாட்டுவதற்கான வழக்குகளை வரையறுத்தல்.

**56.** (1) இப்பாகத்திலுள்ளதெதுவும், இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒரு காணியிலிருந்து, வளவுகளிலிருந்து அல்லது ஒரு கட்டடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள எவரேனுமாள் அல்லது அதன் சட்டமுறையான குடியிருப்பாளரென உரிமைகோருகின்ற எவரேனுமாள், வெளியேற்றற் கட்டளைத் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள், அத்தகைய காணியில் அல்லது வளவுகளில் குடியிருப்பதற்கான அவரது உரிமையை நிலைநாட்டுவதற்காகக் காணிச் சொந்தக்காரருக்கெதிராக வழக்கொன்றைத் தொடுப்பதனைத் தடை செய்தலாகாது.

(2) எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் எந்தக் காணியிலிருந்து அல்லது வளவுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளரோ அந்த ஏதேனும் காணியில் அல்லது வளவுகளில் குடியிருப்பதற்கான அவரது உரிமையை நிலைநாட்டுவதற்காக, வீட்டுச்சொந்தக் காரருக்கெதிராக (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவரினால் தொடுக்கப்பட்ட வழக்கொன்று அத்தகைய ஆளுக்குச் சாதகமாக முடிபுசெய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய காணியினதும் கட்டடத்தினதும் உடைமையை ஒப்படைப்பதற்கு அவர் வலுக்கட்டாயப்படுத்தப்பட்டமை காரணமாக அவரினால் உறப்பட்ட சேதத்துக்காக நியாயமான நட்டஈட்டை அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல்.

**57.** இப்பாகத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள, எது எவ்வாறிருப்பினும், பயனுடையனவாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும் :

ஆயின், ஏதேனும் காணியின் அல்லது வளவுகளின் அல்லது கட்டடத்தின் உடைமையை மீளப்பெறுவதற்கென அல்லது அதற்கான உரித்தை நிலைநாட்டுவதற்கென அல்லது அத்தகைய காணி, வளவுகள் அல்லது கட்டடம் தொடர்பில் ஏதேனும் நிவாரணத்தைக் கோருவதற்கென அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழக்கை மேற்கொண்டு நடாத்துவதற்கு வீட்டுச் சொந்தக்காரருக்குள்ள உரிமைகளை இப்பாகம் பங்கப்படுத்துதலாகாது.

## பாகம் VII

### பொது

அமைச்சரின் பணிப்புகள்.

**58.** (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் பற்றிய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை அதிகார சபைக்கு விடுக்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகள் அதிகாரசபையினால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(2) அமைச்சர், காலத்துக்குக்காலம், அதிகாரசபையைப் பின்வருமாறு எழுத்தில் பணிக்கலாம் :-

(i) அவருக்குத் தேவைப்படக்கூடியவாறாக, அதிகார சபையின் ஆதனம், தொழில் மற்றும் செயற்பாடுகள் என்பன தொடர்பிலான அத்தகைய தகவலைத் தமக்குக் கொடுத்துதவுதல் ; அத்துடன் அதிகாரசபை அத்தகையவொரு பணிப்பையும் நிறைவேற்றுதல் வேண்டும் ;

(ii) அதிகாரசபையின் இலக்குகளிலிருந்தான வேறுபாடுகள், கற்ற பாடங்கள், அக்கறைகொண்டுள்ளவர்களினதும் நன்மைபெறுநர்களினதும் கருத்துக்களும் அவதானிப்புகளும் என்பவற்றை முனைப்பாக எடுத்துக்காட்டுகின்ற எய்துகைகள் பற்றிய அறிக்கையொன்றை ஆண்டுதோறும் தயாரித்தலும், ஒவ்வோராண்டும் ஒற்றோர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமை உகை உறைவிடத் தினமாகப் பெயர் குறிக்கப்படுகின்றதெனப் பொதுமக்களுக்கு அறியத் தருதலும்.

முத்திரைத்தீர்வை செலுத்துவதிலிருந்தான விலக்களிப்பு.

**59.** அதிகாரசபையானது, 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அளவுக்கு, அதிகாரசபையினால் அல்லது அதன்சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக எழுதிநிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனத்தின்மீது அல்லது ஆவணத்தின்மீது முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**60.** (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அது தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதியானது, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**61.** சபையின் தவிசாளர் அல்லது அவரினால் பொதுவாக அல்லது விசேடமாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், நியாயமான எந்நேரத்திலும் ஏதேனும் காணியினுள் அல்லது வளவுகளினுள் பிரவேசிப்பதும், அதிகாரசபையின் ஏதேனும் வேலையை நிறைவேற்றும் அல்லது அதற்குப் பயன்கொடுக்கும் அல்லது அதிகாரசபையின் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு அல்லது ஏதேனும் பணியை நிறைவேற்றுவதற்கு முதனிலையான அல்லது அதன் இடைநேர் விளைவான ஏதேனும் நில அளவையை, பரிசோதனையை அல்லது நுண்ணாய்வைச் செய்யும் நோக்கத் துக்கு நியாயமான முறையில் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய செயல்களைப் பின்னர் செய்வதும், அவருக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும். வளவுகளினுட் பிரவேசித்தலும் பரிசோதனை செய்தலும்.

எல்லாப் பணிப்பாளர்கள் முதலியோர், பகிரங்க அலுவலர் களாகக் கருதப்படுதல்.

62. அதிகாரசபையின் எல்லாப் பணிப்பாளர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், முகவர்களும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல் லைக்குள்ளும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க அலுவலர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபை யானது அட்ட வணைப்படுத் தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

63. அதிகாரசபையானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

அதிகார சபையினால் உறப்பட்ட செலவுகளை அறவிடுதல்.

64. (1) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அதிகாரசபை யினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத் தொகை அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் எவரேனும் பணிப்பாளரினால், அலுவலரினால், சேவையாளரினால் அல்லது முகவரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் அறவிடப்பட்டாலொழிய அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

விதிகள்.

65. (1) எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எது தொடர்பிலும் அதிகார சபையானது விதிகளை ஆக்கலாம்.

(2) இச்சட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதியெதுவும், அது அமைச்சரினால் அங்கீகாரிக்கப்படும்வரை பயனுடையதாதலாகாது.

(3) அத்தகைய விதி ஒவ்வொன்றும் அமைச்சரினால் அங்கீகாரிக்கப்படுவதன்மேல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுதல் தவறொன்றாதல் வேண்டும்.

66. இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை மீறுகின்றவரான அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்றவரான ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டாண்டுகளை விஞ்சாவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

67. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

68. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"நகரக் குடியமர்த்தல் இடப்பரப்பு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்று என்றும், அத்துடன் அமைச்சரினால் அங்கீகாரிக்கப்படவேண்டியவாறான அதிகாரசபையின் உத்தேசங்கள், திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்படுகின்றமையைத் தேவைப்படுத்துகின்ற அதற்குப்புறம்பான எவையேனும் இடப்பரப்புகளையும் உள்ளடக்கும் என்றும் பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்